தினமணி

நவீன தொழில்நுட்பம், புதிய ரகங்களுக்கு விவசாயிகள் மாற வேண்டும்: ஆட்சியர் அறிவுரை
First Published : 26 May 2012 12:48:30 PM IST

தருமபுரி, மே 25: வேளாண்மையில் கூடுதல் லாபம் பெற வேண்டுமெனில் நவீன தொழில்நுட்பம், புதிய ரகங்களுக்கு விவசாயிகள் மாற வேண்டியது அவசியம் என்று
மாவட்ட ஆட்சியர் ஆர். லில்லி கூறினார்.

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் அவர் பேசியது:

மாவட்டத்தில் 461 வருவாய் கிராமங்களில் உழவர் பெரு விழா நடத்தப்பட்டுள்ளது. இதில், 3,195 விவசாயிகளுக்கு ரூ.58 லட்சம் மதிப்பில் வேளாண் இடுபொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. 15 ஆயிரம் விவசாயிகளுக்கு நவீனத் தொழில்நுட்பங்கள் அடங்கிய கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

தோட்டக்கலைத் துறை மூலம் நுண்ணீர் பாசனத் திட்டத்துக்காக 5,653 பேர் பதிவு செய்துள்ளனர். மொத்தம் 430 ஹெக்டேருக்கு ரூ.3.50 கோடி மதிப்பில் பாசனக் கருவிகள் வழங்கப்படும்.

விவசாயிகள் தங்களது விளைபொருளுக்கு போதிய விலை கிடைப்பதில்லை என்று கூறுகின்றனர். விவசாயிகள் பின்பற்றும் தவறான முறையே இதற்குக் காரணம். மஞ்சள் பயிருக்கு அதிக விலை கிடைத்தால் அனைத்து விவசாயிகளும் மஞ்சள் பயிரிடுவதும், மரவள்ளிக்கு அதிக விலை கிடைத்தால் அந்தப் பயிருக்கு செல்வதும் வாடிக்கையாக உள்ளது.

இதைத் தவிர்த்து அவரவர் நிலத்துக்கு தகுந்தபடி ஒவ்வொரு பருவத்துக்கும் ஒரு பயிராக நவீன ரகங்களைத் தேர்வு செய்து பயிரிட வேண்டும். புதிய தொழில்நுட்ப முறைகளையும் புகுத்த வேண்டும். ஆலோசனைகளுக்கு அந்தந்தப் பகுதி வேளாண்மை, தோட்டக்கலை அலுவலர்களை அணுகலாம்.

ஏலகிரியில் உள்ள புறம்போக்கு நிலத்தில் விவசாயக் கிணறுகள் மூலம் மழைநீர் சேமிக்கும் வகையில் கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கப்படும். சொட்டுநீர்ப் பாசனத்துக்கு அரசு முழு மானியம் வழங்குகிறது.

தருமபுரி மாவட்டத்தின் பல பகுதிகள் வறட்சியாக இருப்பதால் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய இந்தத் திட்டம் மிகவும் அவசியமானது. ஆனால், 600 விவசாயிகள் மட்டுமே இந்தத்

திட்டத்தில் பதிவு செய்துள்ளனர். ஒரு மாதத்துக்குள் 2 ஆயிரம் விவசாயிகள் இந்தத் திட்டத்தில் பதிவு செய்ய வேண்டும். பயனுள்ள திட்டங்களை ஒவ்வொரு விவசாயியும் தவறாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

இந்தக் கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ப. ராமர், வேளாண்மை இணை இயக்குநர் மனோகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கக்கன் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள், விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சர்க்கரை ஆலை வேலைநிறுத்த

காலத்துக்கு தீர்வு என்ன?

சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சம ஊதியம் கோரி அண்மையில் 40 நாளாக வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டது. இதனால், தமிழகத்தில் உள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் அரவை நிறுத்தப்பட்டது. எனவே, விவசாயிகள் கரும்புகளை வெட்டவில்லை. தருமபுரி மாவட்டத்தில் உள்ள 2 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கும் கரும்பு பயிரிட்டிருந்த விவசாயிகளுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அரூர் சுப்பிரமணிய சிவா ஆலைக்குப் பதிவு செய்த 15 ஆயிரம் டன்னுக்கு மேற்பட்ட கரும்புகள் அப்படியே உள்ளன. இதேபோல, பாலக்கோடு ஆலைக்கான பதிவு செய்த கரும்புகளும் உள்ளன. ஆனால், கரும்பு பயிருக்கு வாங்கிய கடன் தவணையை திரும்பச் செலுத்த வங்கிகள் நிர்பந்தம் செய்கின்றன. எனவே, வங்கிகள் கடன் வசூலிக்க அவகாசம் அளிக்க வேண்டும். வெட்டப்படாமல் உள்ள கரும்புகளை வெட்டி ஆலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கூறினர்.

இதற்குப் பதில் அளித்த ஆட்சியர் ஆர். லில்லி, அரூர் ஆலைக்கு பதிவு செய்த கரும்புகளை வெட்டி திருப்பத்தூர் ஆலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். இதேபோல், பாலக்கோடு ஆலைக்கான கரும்புகளையும் அரவை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## இறால் பண்ணை பதிவுச் சான்றை புதுப்பிக்க விண்ணப்பிக்கலாம்

First Published : 26 May 2012 12:27:29 PM IST

நாகப்பட்டினம், மே 25: நாகை மாவட்டத்தில் இறால் பண்ணைகளுக்கான பதிவுச் சான்றை புதுப்பிக்க விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடல்சார் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம் அத்தியாயம் எண். 5, விதி எண் 12-ன்படி, இறால் பண்ணைகளுக்கான பதிவுச் சான்றை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும்.

பதிவுச் சான்று காலாவதியாகும் தேதிக்கு 2 மாதங்களுக்கு முன்பு விண்ணப்பப் படிவம் எண் 3-ஐ பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவங்களை நாகை, நீர்வாழ் உயிரின

வளர்ப்பு, மீன்வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்திலிருந்து பெறலாம் அல்லது கடல்சார் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணைய இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம் என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலக்கடலை சாகுபடிக்கு மே 29-ல் இலவசப் பயிற்சி

First Published : 26 May 2012 12:54:10 PM IST

நாமக்கல், மே 25: நிலக்கடலை சாகுபடி குறித்து நாமக்கல்லில் வருகிற செவ்வாய்க்கிழமை (மே 29) ஒருநாள் இலவசப் பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

இதுகுறித்து, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் மோகன் விடுத்துள்ள செய்தி:

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நிலக்கடலை சாகுபடியும், களைக்கட்டுப்பாடு முறை என்ற தலைப்பில் செவ்வாய்க்கிழமை நடக்க உள்ள ஒருநாள் இலவசப் பயிற்சி முகாமில், நிலக்கடலை சாகுபடியின் முக்கியத்துவம், மண் பரிசோதனை செய்தல், நிலம் தயார் செய்தல், களை நிர்வாகம் உள்ளிட்டவை குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

பயிற்சியில் விவசாயிகள், இளைஞர்கள் என அனைத்துத் தரப்பினரும் பங்கேற்கலாம். விருப்பமுள்ளவர்கள் மே 28-ம் தேதிக்குள் நாமக்கல் மோகனூர் சாலையிலுள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் நேரிலோ அல்லது 04286-266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்களிலோ தொடர்பு கொண்டு பதிவு செய்திட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.ன

குன்னூர் பழக் கண்காட்சி இன்று தொடக்கம்

First Published : 26 May 2012 03:50:37 AM IST



குன்னூர், மே 25: நீலகிரி கோடை விழாவையொட்டி, குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 54-வது பழக் கண்காட்சி சனிக்கிழமை (மே 26) தொடங்குகிறது.

நீலகிரி கோடை விழாவின் நிறைவாக குன்னூரில் ஆண்டுதோறும் பழக்கண்காட்சி நடத்தப்படும். குன்னூர் சிம்ஸ் பூங்காவில் நடைபெறவுள்ள இக்கண்காட்சிக்கான ஏற்பாடுகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகின்றன. கண்காட்சியில், அரிய, மருத்துவக் குணம் கொண்ட பழங்கள் காட்சிக்கு வைக்கப்படுகின்றன.

காஷ்மீர் பிளம், மருத்துவக் குணம் நிறைந்த பட்டர் ஃப்ரூட், பீச் மற்றும் நீலகிரி பிளம் உள்ளிட்ட பழங்கள் இடம்பெறுகின்றன. கண்காட்சியைக் காண தமிழகம் மட்டுமின்றி நாட்டின் இதர பகுதிகளிலிருந்தும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றுலாப் பயணிகளைக் கவர கண்காட்சி நடைபெறும் இரண்டு நாள்களிலும் ஆடல், பாடல், மேஜிக் ஷோ, கேரள பாரம்பரிய நடனம் என பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. கண்காட்சிக்கான ஏற்பாடுகளை தோட்டக்கலை இணை இயக்குநர் க. மோகன், துணை இயக்குநர் பிரகாசம், உதவி இயக்குநர் சிபிலா மேரி ஆகியோர் செய்துள்ளனர்.